பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 23 வெள்ளிக்கிழமை 07.01.2022 கதிர் 291

## கிளிநொச்சியில் உயிரிழந்த பெண்ணுக்குக் கொரோனா

கிளிநொச்சியில் உயிரிழந்த பெண் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 32 வயதுடைய கே.கௌரி என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு, கிழக்கு கட்சிகளின் பயணத்துக்கு ஒருபோதும் தடையாக இருக்கமாட்டோம்!

## நமது பயணத்தையும் கைவிடப் போவதில்லை; மனோ, திகா, இராதா இன்று கூட்டாக அறிவிப்பு



**வடக்கு, கிழக்கு கட்சிகளின் பயணத்துக்கு நாம் ஒருபோதும் தடையாக இருக்கப்போவதில்லை. அதேவேளை, நமது பயணத்தையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடப்போவதில்லை.**

**- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி அறிவித்துள்ளது .**

**தமிழ் முற்போக்குக் கூட்டணியில் மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் எம்.பி. தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம், வேலுசாமி இராதா கிருஷ்ணன் எம்.பி. தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன அங்கம் வகிக்கின்றன.**

☞2

## மோசமான நிலைமையில் இலங்கை; ஒத்துழைப்பு வழங்க இந்தியா தயார்

### வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு



கடினமான சந்தர்ப்பங்களை எதிர்கொள்ளும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவிக்கும் நோக்கில் இலங்கை வெளிவிவகார அமைச்சரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸைத் தாம் தொலைபேசியில் தொடர்புகொண்டன எனவும் அவர் கூறியுள்ளார்.

இதன்போது இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக தொடர்ச்சியாக தொடர்புகளைப்

☞2

## நாட்டின் பொருளாதாரம் அரசால் முற்றாக அழிப்பு

### அநுரகுமார குற்றச்சாட்டு



இலங்கையின் பொருளாதாரம் ராஜபக்ஷ அரசால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க குற்றஞ்சுமத்தியுள்ளார்.

☞2

## 'அம்புலு' திரைப்படத்தின் இசை வெளியீடு நாளை



'அம்புலு' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது எனப் படக்குழு அறிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே படக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

☞2

## கிளிநொச்சி மின்தகன மயானத்துக்கு அடிக்கல்



கிளிநொச்சியில் அமையவுள்ள மின்தகன மயானத்துக்கு நேற்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

குறித்த மின்தகன மயானமானது

☞2

## மத்திய வங்கி ஆளுநரை போட்டுத் தாக்கிய சஜித்

### வவுனியாவில் மாவட்ட வைத்தியசாலைக்கு அத்தியாவசிய உபகரணங்கள் கையளிப்பு



பணம் அச்சடிக்கப்பட்டாலும் பணவீக்கம் அதிகரிக்காது எனப் பொருளாதாரத்தின் அடிப்படைகள் கூடத் தனக்குத் தெரியாதவர் போல் மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகின்றார் என்று

☞2

# இந்திய மீனவர்களுக்கு எதிராக யாழில் போராட்டம்





(இ.கலையமுதன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து யாழ்., சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முன்பாக வீதியை மறித்துப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனமும், மாதகல் பிரதேச கடற்தொழிலாளர்களும் இணைந்து

☞2

## மத்திய வங்கி ஆளுநரை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்த நாட்டை ஆர்ஜென்டினா, சிம்பாப்வே, வெனிசுவேலா போன்ற நாடுகளை நோக்கித் தள்ளவே மத்திய வங்கியின் ஆளுநர் செயற்பட்டு வருகின்றார் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசின் தன்னிச்சையான தீர்மானங்களால் முழு நாடும் அழிவை நோக்கிச் சென்றுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவின் பிரகாரம் செயற்படுத்தப்படும் 'ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து மூச்சு' திட்டத்துக்கு இணைவாக ஆரோக்கியமான நாட்டை உருவாக்கும் நோக்கில் 'ஜன சுவய' திட்டத்தின் கீழ் 'சத்காரய' திட்டத்தின் 35ஆவது கட்டமாக, 24 இலட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்கள் இன்று வவுனியா மாவட்ட தேசிய வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு 'எதிர்க்கட்சியின் மூச்சு' நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றனர்.

இதுவரை 34 கட்டங்களில் 10 கோடி 16 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த வைத்தியசாலை உபகரணங்களை ஐக்கிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்டுள்ளன.

## 'அம்புலு' திரைப்பட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஜீபன்ராஜின் தயாரிப்பிலும் சுதர்ன் ரட்ணத்தினுடைய இயக்கத்திலும் உருவாகியுள்ள 'அம்புலு' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நாளை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் நடைபெறவுள்ளது.

ஆர்.வின். பிரசாத்தின் இசையில் உருவாகியுள்ள பாடல்கள் படத்துக்குப் பலமாக அமையும் என்றும் இசை வெளியீட்டு விழாவுக்கு அனைவரையும் வருமாறும் படக்குழு அறிவித்துள்ளது.

## கிளிநொச்சி மின்தகன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரைச்சிபிரதேசசபையின்வழிகாட்டலில் மயான அபிவிருத்திக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மக்கள் அமைப்பு புலம்பெயர்ந்துள்ள மக்கள் கிளிநொச்சி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களின் நிதிப் பங்களிப்பில் 25 மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ளது.

மயான அபிவிருத்திக்குழுவின் தலைவர் நவரட்ணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், சின்மயா மிசன் சுவாமிகள், அருட்தந்தை, கிளிநொச்சி மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள், நிதி உதவி செய்த கொடையாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இந்திய மீனவர்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

2 ஆயிரத்து 500 இந்திய இழுவை மடித் தொழிலை நிறுத்தும் வரை போராடுவோம், இந்திய அரசு வடக்கு மீனவர்களுக்கு நட்டஈடு வழங்கக் கோருகின்றோம், எமது கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்துவோம் போன்ற கோஷங்களை முன்வைத்தே போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வீதியை மறித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமையால் அந்த வீதி வழியான போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டு இருந்த நிலையில், பொலிஸார் போராட்டக்காரர்களை வீதியோரமாக நின்று போராடுமாறு பணித்தபோது, கடலில் அயல் நாட்டினவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க முடியவில்லை, சொந்த நாட்டு மக்களை அடக்க முயல்கிறீர்களா? எங்களுடன் கடலுக்கு வாருங்கள், அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் காண்பிக்கின்றோம். முடிந்தால் அவர்களைக் கைது செய்யுங்கள் எனக் கோரி பொலிஸாரின் பணிப்பைப் புறம் தள்ளி வீதியில் அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் குறித்த போராட்டத்தை முன்னெடுத்த பின்னர், உதவி பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்த பின்னர், தமது போராட்டத்தை முடிவுறுத்தினர்.

## நாட்டின் பொருளா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனாவிடம் இருந்து கடன்பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருந்த போது, கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி திட்ட சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதேபோல், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்று கடன் கோரியுள்ள நிலையில், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தாரை வார்க்கப்படுகின்றன.

அரசின் உண்மை நிலை தொடர்பான விபரங்களை வெளியிடுவோர் பதவியில் இருந்து நீக்கப்படுகின்றனர்.

இவ்வாறு முறையற்ற நிர்வாகத்தால் நாட்டின் பொருளாதாரம் மேலும் பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது - என்றார்.

## மோசமான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேணுவதற்கு இணங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதற்காக, இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் இருதரப்பு வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடன் உதவியை நீடிப்பது குறித்து, தொடர்ந்தும் பேச்சுகள் இடம்பெறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் கீழ், இலங்கையை முக்கியமான தரப்பாகக் கொண்டு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் புதுடில்லியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் மேற்படி மூன்று கட்சிகளின் தலைவர்களும் இணைந்து இன்று கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

'இந்தியப்பிரதமருக்கு, இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளின் விண்ணப்பக் கடிதம்' என்று ஆரம்பிக்கப்பட்ட கூட்டு செயற்பாட்டில், சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாசைகளையும் உள்ளடக்குவதில் சிக்கலை எதிர்கொண்டதாலும், எனவே எமது பங்களிப்பு வடக்கும், கிழக்கும் தமிழ்க் கட்சிகளின் சுதந்திரச் செயற்பாட்டுக்குப் பாதகமாக இருப்பதை உணர்ந்ததாலும் இந்தச் செயற்பாட்டுக்கு வெளியில் நின்று அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் என்ற பொதுநோக்கில், இந்தச் செயற்பாட்டை ஆரம்பித்த ஏற்பாட்டாளர்களான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., இணைப்பாளர் சுரேன் குருசுவாமி ஆகியோருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

அதேவேளை, பொது இணக்கப்பாட்டின் மூலம் பொது ஆவணம் தயாரிக்க முடியாமையைக் கருத்தில் கொண்டு மலையகத் தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரதப் பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் தனித்தனியாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் ஆவணக் கடிதம் எழுதப்படும்.

### முதல் கலந்துரையாடல்

'இலங்கை அரசமைப்பில் ஏற்கனவே உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நடைமுறைப்படுத்தி, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உறுதி செய்து, மாகாண சபைத் தேர்தலையும் விரைந்து நடத்த இலங்கை அரசை வலியுறுத்த, இந்தியாவை ஒருமித்து தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் கோருதல்' என்ற அடிப்படையிலான அழைப்பின் பேரிலேயே ஏற்பாட்டாளர்களால் இந்தக் கூட்டுச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.), தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட்சிகளும் கடந்த நவம்பர் இரண்டாம் திகதி நடைபெற்ற முதல் கலந்துரையாடலில் கலந்துகொண்டன.

### நோக்கம்

இலங்கை அரசமைப்பில் இடம்பெற்றுள்ள ஒரே அதிகாரப் பரவலாக்கல் சட்டமான 13ஆவது திருத்தம் என்பதை இறுதித் தீர்வாகக் கருதி இந்தப் பேச்சு ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், இலங்கை அரசு, இந்தக் குறைந்தபட்ச சட்டத்தைக் கூட முழுமையாக அமுல் செய்யாமல் இழுத்தடிப்பதுடன், இந்தச் சட்டமூலம் மாகாண சபைகளுக்கு வழங்கிய அதிகாரங்களையும்கூட வாபஸ்பெறுகின்றது என்ற உண்மை உலகுக்கு அதிகாரபூர்வமாக ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளால் அறிவிக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கமே எமது பொது நோக்காக இருந்தது.

### தமிழரசுக் கட்சி உள்வாங்கல்

இந்தச் செயற்பாட்டில், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை ஆரம்பம் முதல் வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நேரடியாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் சந்தித்து அழைப்பு விடுத்ததையும், தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து விட்டு விண்ணப்பக் கடிதத்தில் கையெழுத்திடும் யோசனையை, தமிழ் முற்போக்குக் கூட்டணியாகிய நாம் நிராகரித்தோம் என்பதையும் ஏற்பாட்டாளர்கள் நன்கறிவார்கள்.

### பொது ஆவணக் கடிதம்

ஆரம்பத்தில், பாரதப் பிரதமருக்கான கடித வரைபு, அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும், பொது குறைந்தபட்ச நிலைப்பாடுகளைக் கொண்ட விண்ணப்பக் கடிதமாக சுமார் ஒன்றரைப் பக்கத்தில் வடிவமைக்கப்பட்டது. எனினும், தொடர்ச்சியாக நடைபெற்ற கலந்துரையாடல்களின்போது, தமிழ்த் தேசிய அரசியலின் சமகால வரலாறு முழுமையாக அதில் எழுதப்பட்டு, எட்டு பக்கங்களைக் கொண்ட நீண்ட ஆவணக் கடித வரைபாக மாற்றப்பட்டது. இதன் பின்னுள்ள நியாயப்பாட்டை எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஆனால், ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் சார்பான கடிதம் என்பதால், இதே நியாயப்பாட்டின் அடிப்படையில், இந்தக் கடிதத்தில் மலையகத் தமிழ் மக்களின் அபிலாஷகளும் உள்ளடக்கப்பட வேண்டிய இயல்பான தேவைப்பாடு எழுந்தது. மேலதிகமாக இந்த ஆவணக் கடித வரைவு, இறுதி வடிவம் பெறமுன்னரே ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டு வாதப்பிரதிவாதங்கள் தமிழ் பேசும் அரசியல் சமூக பரப்புகளில் ஏற்படுத்தியது.

### பொது ஆவணக் கடிதம் நிராகரிப்பு

இந்நிலையிலேயே, கடந்த வருடத்தின் இறுதி நாளான்று (டிசம்பர் 31ஆம் திகதி), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மறுநாள் இவ்வருடத்தின் முதல் நாள் (ஜனவரி 01), கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம்.பியின் கொழும்பு இல்லத்தில் கூடி புதிய கடித வரைபு தயாரிக்கப்பட்டது.

ஆனால், இந்த ஆவணக் கடித வரைபு, உடனடியாகவே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டதை நாம் அறிந்தோம்.

### மலையகத் தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி ஆவணக்கடிதம்

ஆகவே, பொது ஆவணம் தயாரிக்க முடியாமையைக் கருத்தில்கொண்டு சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரதப் பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் ஆவணக் கடிதம் எழுத தமிழ் முற்போக்குக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

### வடக்கு, கிழக்கு உடன்பிறப்புகளுக்கு எமது ஒத்துழைப்பு தொடரும்

இந்தப் பின்னணிகளிலேயே, தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கில், வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளின் இந்தச் செயற்பாட்டுக்கு வெளியில் நின்று ஒத்துழைப்புகளை வழங்குவோம் என்ற முடிவை நாம் எடுத்துள்ளோம். வடக்கு, கிழக்கு உடன்பிறப்புகளுக்கு, வரலாறு முழுக்கவும் இதை நாம் செய்துள்ளோம். இனியும் செய்வோம். உரிமைக்குக் குரல் கொடுப்போம்; உறவுக்கு கை கொடுப்போம் என்ற எமது கொள்கை தொடரும் - என்றுள்ளது.

**சாரதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொழும்பு சென்று வரக் கூடிய கனரக வாகன சாரதி தேவை

தொடர்புகளுக்கு -
0770266833
0774449705

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம் - 076 443 8622
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# சமூகக் கடமை இது

கொரோனா வைரஸின் புதிய திரிவான ஒமிக்ரோன் குறித்துத் தொடர்ந்து எச்சரிக்கப்பட்டு வந்தாலும் அது தொடர்பில் மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வோ, சிரத்தையோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை என்று மருத்துவ வட்டாரங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

முன்னர் பரவிய டெல்டா ரக கொவிட் வைரஸை போன்ற உயிரிழப்புப் பாதிப்பை ஒமிக்ரோன் ஏற்படுத்தா விட்டாலும், அதன் தொற்றுப் பரவல் திறனின் வீரியம் பலமடங்கு அதிகம். அது பரவத் தொடங்கினால் தடுத்து பிடிப்பது – மறித்துக் கட்டுப்படுத்துவது – சாத்தியமேயற்றது என மருத்துவ வட்டாரங்கள் சுட்டுகின்றன.

தொற்றுப் பரவல் ஆய்வுகளின்படி, ஒமிக்ரோன் ரக வைரஸ் இலங்கையில் பரவத் தொடங்கிவிட்டது. அதன் பரவலைத் தடுத்து, தொற்றைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது இனி சாத்தியமா என்பது தெரியவில்லை என நிபுணர்கள் கூறுகின்றனர்.

டெல்டா வைரஸ் ரகத்தைபோன்று ஒமிக்ரோன் உயிரிழப்பையோ, மோசமான உடல் பாதிப்பையோ ஏற்படுத்தாது எனினும், அது விரைந்து பட்டி தொட்டி எல்லாம் பரவிவிடும் ஆபத்து இருப்பதால் அது குறித்து அதிக கரிசனை கொள்கின்றன சுகாதார வட்டாரங்கள்.

ஒமிக்ரோன் தொற்றுக்கு எதிரான பூரண செயற்பாடுள்ள தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதா என்று கேட்டால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக கொவிட் வைரஸ் தனது கட்டமைப்பை மாற்றி புதுப்புது வடிவங்களில் – புதிய புதிய அவதாரம் எடுத்து –வந்து கொண்டிருக்கின்றது.

ஒரு ரக வைரஸுக்கான தடுப்பூசி மருந்து, மற்றைய ரகத்துக்கு முற்றிலும் பொருத்தமானது என்று உறுதி அளிக்க முடியாத சிக்கலில் மருத்துவ வட்டாரங்கள் தடுமாறுகின்றன.

போதாக்குறைக்கு ஒரு ரகத்துக்கான தடுப்பூசி ஏற்றி எவ்வளவு காலத்துக்கு அந்தத் தடுப்பு திறன் உடலில் இருக்கும் என்பதற்கும் தெளிவான பதில் தரக்கூடிய நிலையில் ஆய்வாளர்கள் இல்லை.

இந்தப் பின்புலத்தில்தான் தற்போது பரவிவரும் வீரியமிக்க ஒமிக்ரோன் வைரஸின் தாக்கத்தை எதிர்கொள்வதற்கு, இதுவரை இரண்டு தடுப்பூசிகளை பெற்றவர்களை மூன்றாவது செயலுக்கி (பூஸ்டர்) தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு மருத்துவ வட்டாரங்கள் வற்புறுத்துகின்றன.

மூன்றாவதாக ஏற்றப்படும் பூஸ்டர் தடுப்பூசி ஒமிக்ரோன் தொற்றுக்கான எதிர்ப்பைக் காத்திரமாகத் தரக்கூடியது. மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை அனைவரும் பெற்றுக் கொண்டால் ஒமிக்ரோன் பரவலை உறுதியாக எதிர்கொண்டு, கட்டுப்படுத்தலாம் என மருத்துவ வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

ஆனால் மூன்றாவது பூஸ்டர் ஊசியை பெற்றுக்கொள்வதில் மக்கள் மத்தியில் மெத்தனப் போக்கு காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி கட்டுப்பாடின்றித் தாராளமாகக் கிடைக்கின்றது. தடுப்பூசி செலுத்தும் மையங்களும் தாராளமாகப் பரந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இதுவரை ஆக 25 வீதத்தினரே இந்தத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். 75 வீதத்தினர் சிரத்தையின்றி உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின் றது. மக்களின் இந்த பொறுப்பற்றதனம் ஒமிக்ரோன் வைரஸை வெற்றிலை வைத்து அழைக்கும் சிறுபிள்ளைத்தனமாகும்.

ஒமிக்ரோனினால் மீண்டும் ஒரு முடக்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக பொறுப்புடன் செயற்படுவோம். மூன்றாவது தடுப்பூசியை இனியும் காலதாமதம் செய்யாமல் விரைந்து பெற்றுக்கொள்வோம். தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக கைக்கொள்வோம். அது நமது சமூகக் கடமையாகும்.



# வவுனியாவில் வீடு புகுந்து தாக்கி தங்க நகை, பணம் கொள்ளை!

## குடும்பஸ்தர் வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா புதுக்குளம் தேவகுளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்கு நுழைந்த திருடர்கள் வீட்டிலுள்ளவர்கள் அணிந்திருந்த தங்க நகைகள், பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் என ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா புதுக்குளம் தேவதளம் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு 11 மணியளவில் வீடு ஒன்றிற்குள் சத்தமாக குரைத்துக்கொண்டிருந்த நாய் ஒன்றை வீட்டினைத்திறந்து வெளியே விட சென்றபோது அங்கு பதுங்கியிருந்த பத்துக்கும் மேற்பட்டகொள்ளைகள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலுள்ளவர்களைத் தாக்கிவிட்டு அவர்கள் அணிந்திருந்த எட்டுப்பவுண் தங்க நகைகள் உட்பட பதினோராயிரம் ரூபா பணம் என்பனவற்றை கத்தி முனையில் கொள்ளையிட்டு, தப்பிச் சென்றுவிட்டனர் என ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள் ளப்பட்டுள்ளது.

தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்தில் குடும்பஸ்தவரான சிறீஸ்கந்தவாசன் 59 வயதுடைய நபர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பாகத் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மோப்ப நாய் சகிதம் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் எரிவாயு வெடிப்பு: வீடு ஒன்று எரிந்து நாசம்!

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தரவான் கோட்டை பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) மதியம் எரிவாயு வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

தரவான் கோட்டை பகுதியை சேர்ந்த கூலி தொழிலில் ஈடுபடும் பெண் ஒருவரின் வீட்டில் மேற்படி எரிவாயு மற்றும் அடுப்பு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வெடிப்பு காரணமாக வீடு எரிந்து முற்றுமுழுதாக நாசமாகிய நிலையில் குறித்த பெண் அதிர்சியின் காரணமாக மயக்கம் அடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண், வீட்டில் தனிமையில் வசிப்பதுடன் பனம் பொருள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே நேற்று (வியாழக்கிழமை) மதியம் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண் வசித்த முழு வீடும் எரிந்து நாசமாகியுள்ள நிலையில் அருகில் இருந்த கிராம மக்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது.

எனினும் வீட்டில் இருந்த பெறுமதி வாய்ந்த பொருள்கள் சாம்பராகி உள்ளன.

இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நகர சபை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்திற்கு என தனியான ஒரு தீயணைப்பு ஏற்பாடு இன்மையால் இவ்வாறான பல தீ விபத்துக்கள் பாரிய சேதங்களை ஏற்பட்ட பின்னரே கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# தென் துருவத்துக்கு சென்று இந்திய வம்சாவளி சீக்கியப் பெண் சாதனை



தென் துருவத்துக்குச் சென்று வந்துள்ள பிரிட்டனைச் சேர்ந்த இந்திய வம்சாவளி ராணுவ அதிகாரி ஹாபிரீத் சாண்டி (32), அந்தப் பகுதிக்கு தனியாகச் சென்ற வெள்ளை இனத்தைச் சேராத முதல் பெண் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இதுகுறித்து தனது வலைதளப் பக்கத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:

பனி பொழிந்து கொண்டிருக்கும் தென் துருவப் பகுதிக்கு வெற்றிகரமாக வந்து சேர்ந்தேன். இங்கு வந்ததால் மனதில் பலவிதமான உணாவுகள் எழுந்துள்ளன.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வரை எனக்கு தென் துருவம் என்றால் என்னவென்பதே தெரியாது.ழி

மிகக் கடுமையான முயற்சிக்குப் பிறகே இங்கு வந்து சோந்தேன். இந்த சாதனையில் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றிகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இயன்முறை வைத்தியரானஹாபிரீத் சாண்டி, பிரிட்டன் மருத்துவப் படைப் பிரிவில் பயிற்சி அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.



# நடுக்கடலில் மூழ்கியது படகு: 11 மாலுமிகளை மீட்ட ஈரான் கடற்படை

புயல், மோசமான வானிலை மற்றும் தொழில்நுட்ப கோளாறால் நடுக்கடலில் மூழ்கிய படகில் சிக்கித் தவித்த 11 இந்திய மாலுமிகளை மீட்டதாக ஈரான் கடற்படை தெரிவித்துள்ளது.

ஓமனின் சோகர் துறைமுகத்திற்கு சர்க்கரை ஏற்றிச் சென்ற படகு, சூறாவளிக் காற்று மற்றும் கடல் சீற்றத்தில் சிக்கி ஈரான் கடற்பகுதியில் நுழைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறிந்து வந்த ஈரான் கடற்படையினர் படகில் தவித்த 11 இந்திய மாலுமிகளை மீட்டுள்ளோம் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்க அணு ஆயுதக் கப்பலுக்கு கப்டனாக முதல் தடவையாக பெண் நியமனம்



அமெரிக்க கடற்படை வரலாற்றில் முதன்முறையாக, அந்நாட்டின் அணு ஆயுதம் தாங்கி கப்பலான, யு.எஸ்.எஸ்., ஆபிரஹாம் லிங்கனுக்கு, பெண் ஒருவர் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க கடற்படையில், 20ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் செவிலியர்கள் பணிக்கு பெண்களை உள்வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் போது, இராணுவத்தில் பெண்கள் சேவையாற்றுவது அதிகரித்தது. கடற்படைக்குச் சொந்தமான விமானங்களை 1974 முதல் பெண்கள் இயக்க தொடங்கினர்.

போர்க் கப்பல்களை 1994 முதல் பெண்கள் இயக்க தொடங்கினர். அமெரிக்க கடற்படை வரலாற்றில், அணு ஆயுதம் தாங்கி போர்க் கப்பல்களுக்கு பெண்கள் தலைமை வகித்தது இல்லை. இந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

யு.எஸ்.எஸ்., ஆபிரஹாம் லிங்கன் என்ற அணு ஆயுதம் தாங்கி போர்க் கப்பலுக்கு, ஏமி பார்ன்ஷிமிட் என்ற பெண் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இந்த கப்பலின் செயல் அதிகாரியாக, 2016 முதல் 2019 வரை பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# கேபிடல் தாக்குதலின் ஆண்டு நிறைவு ட்ரம்பை கடுமையாக சாடிய பைடன்



அமெரிக்க கேபிடல் தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு நாளில், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை ஜனாதிபதி ஜோ பைடன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு பைடனின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை சான்றளிக்க காங்கிரஸ் கூடியபோது ட்ரம்ப் ஆதரவாளர்கள் கேபிடல் கட்டடத்தை முற்றுகையிட்டனர்.

அமெரிக்க அரசியல்வாதிகள், ட்ரம்பின் ஆதரவாளர்களிடம் இருந்து பயமுறுத்தும் நேரடிக் காட்சிகள் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்த கேபிடல் கட்டட தாக்குதல் சம்பவம் அமெரிக்க அரசியல் வரலாற்றில், ஒரு கரும்புள்ளியாகப் பதிவானது. அந்நிகழ்வு நடந்து முடிந்து ஓராண்டு நிறைவடைந்த நிலையில், அது குறித்து கருத்துத் தெரிவித்த பைடன், 'தனது ஆதரவாளர்களிடம் காங்கிரஸை நோக்கி அமைதியாக பேரணியை நடத்தச் சொன்ன ட்ரம்ப், போராடவும் ஊக்குவித்தார். தான் தோற்ற தேர்தலில் பெரிய அளவில் தேர்தல் முறைகேடு நடந்திருப்பதாக ஆதாரமின்றி கூறினார்' என கூறினார்.

ஜோ பைடன் ட்ரம்பை கடுமையாக விமர்சித்தமையைத் தொடர்ந்து, ட்ரம்ப் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் 'தேர்தலைத் குறித்து பைடன் தொடர்ந்து பொய் கூறி வருகிறார்' என்று குறிப் பிட்டுள்ளார். இதனிடையே, கேபிடல் கட்டட முதலாமாண்டு நிறைவைத் தொடர்ந்து ஜனநாயகக் கட்சியினர் பல்வேறு நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுள்ளனர்.

# ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த ரஷ்ய துருப்புக்களை களமிறக்கும் கஸகஸ்தான்

எரிபொருள் விலையேற்றத்தால் தூண்டப்பட்ட அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த, ரஷ்ய தலைமையிலான இராணுவ துருப்புக்களை கஸகஸ்தான் இராணுவம் களமிறக் கவுள்ளது.

நாடு தழுவிய அமைதியின்மை அதிகரித்து வருவதால், ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோகாயேவ், கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பின் ஆதரவைக் கோரினார். இந்த நிலையில் இச்செய்தி வெளியாகியுள்ளது. இதுகுறித்து லண்டனில் உள்ள சத்தம் ஹவுஸ் வெளியுறவுத்துறையின் மத்திய ஆசியா குறித்த நிபுணரான கேட் மல் லின்சன் கூறுகையில்,

'இந்த எதிர்ப்புக்கள் கசாக் அரசாங்கம் தங்கள் நாட்டை நவீனமயமாக்கி அறிமுகப்படுத்தத் தவறியதில் மிகவும் ஆழமான மற்றும் கொதித்தெழுந்த கோபம், வெறுப்பின் அறிகுறியாகும். அனைத்து மட்டங்களிலும் மக்களை பாதிக்கும் சீர்திருத்தங்களும் அடங்கும்' என கூறினார்.

தொலைக்காட்சி உரையில், 'நாட்டை ஸ்திரப்படுத்த உதவுவதற்காக ரஷ்யா மற்றும் ஐந்து முன்னாள் சோவியத் நாடுகளைக் கொண்ட இராணுவக் கூட்டணியான சி.எஸ்.டி.ஓ. விடம் உதவி கேட்டதாகக் ஜனாதிபதி டோகாயேவ் கூறினார். அத்துடன், அமைதியின்மை வெளிநாட்டுப யிற்சி பெற்ற பயங்கரவாத கும்பல்களின் வேலை என்றும் குற்றஞ்சாட்டினார். இதனிடையே ஜனாதிபதி நாடுதழுவிய அவசரகால நிலையை விதித்துள்ளார். அதில் ஒரே இரவில் முடக்க நிலை உத்தரவு மற்றும் வெகுஜனக் கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது மற்றும் போராட்டங்களுக்கு கடுமையான பதிலளிப்பதாக சபதம் செய்துள்ளார். கஸகஸ்தானில் நிலைமையை நெருக்கமாகப் பின்தொடர்வதாக அமெரிக்க வெளியுறவுத்துறை கூறியுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மீண்டும் இரவுநேர ஊரடங்கு நாளை முதல் அமுலாகின்றது!



தமிழகத்தில் கொரோனாத் தொற்று மீண்டும் வேகமாக பரவி வரும் நிலையில், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கூடுதல் கட்டுப்பாடுகள் தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து அதிகாரிகளோடு கலந்தாய்வுகளை மேற்கொண் டிருந்தார்.

கொரோனாத் தடுப்புப் பணிகள் தொடர்பாக கலைவாணர் அரங்கத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை கூட்டமும் நடைபெற்றது. இதில் தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், மருத்துவ நிபுணர்கள் மற்றும் அதி காரிகள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழுங்கியிந்தனர்.

இதனையடுத்து, தமிழகத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் நாளை முதல் இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும். பொழுதுபோக்கு பூங்காக்கள், கேளிக்கை பூங்காக்கள் போன்றவை செயற்படவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அனைத்து கல்லூரிகளுக்கும், தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் ஜனவரி 20 ஆம் திகதி வரை விடுமுறை வடிகப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என ஏற்கனவே சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மோடிக்கு உயிரச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டதைக் கண்டித்து சென்னையில் நடந்த பா.ஜனதா மறியலில் 300 பேர் கைது

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பஞ்சாப் சென்றபோது அவரது பாதுகாப்பு விடயத்தில் அவரது உயிருக்கு தீங்கு விளைவிக்க முயன் றதாக பஞ்சாப் மாநில அரசைக் குற்றஞசாட்டி, கண்டித்து பட்டினப்பாக்கம் சீனிவாசபுரத்தில் பா.ஜனதா சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று நடந்தது. இந்தப் போராட்டத்துக்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை. ஆனால் அதை மீறி பா.ஜனதாவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். மாநில துணைத்தலைவர் வி.பி.துரை சாமி, பொதுச் செயலாளர் கரு.நாக ராஜன், சுதாகர்ரெட்டி, தேசிய செயற்குழு உறுப் பினர் குஷ்பு சுந்தர் மற்றும் பலர் கலந்துகொண் டனர். அவர்களைக் கைதுசெய்ய பொலிஸார் முயன்ற போது அதைக் கண்டித்து சாலை மறிய லிலும் பலர் ஈடுபட்டனர். பின்னர் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.



## தமிழக சட்டசபைக் கூட்டம் முடிந்தது

### திகதியின்றி ஒத்திவைப்பு



2022 ஆம் ஆண்டின் முதலாவது தமிழகச் சட்டமன்றக் கூட்டம் நேற்று முன்தினம் ஆளுநர் ஆர்.என்.ரவி உரையுடன் தொடங்கியது. நேற்று அந்த உரை மீது உறுப்பினர்களின் விவாதம் நடை பெற்றிருந்தது. இன்று அந்த விவாதத்துக்குப் பதில் அளித்தும், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரிவாக உரை யாற்றியிருந்தார்.

இந்தக் கூட்டத்தொடரில் மொத்தம் 15 சட்ட மசோதாக்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டன. இதைத் தொடர்ந்து சட்டசபைக் கூட்டம் இன்று முடிவடைந்தது. மறுதேதி குறிப்பிடாமல் சபாநாயகர் அப்பாவு சட்டசபையை ஒத்தி வைப்ப தாக அறிவித்தார்.

## அம்மா உணவகங்கள் மூடப்படா முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

அம்மா உணவகங்கள் எக்காரணத்தை கொண்டும் மூடப்படா. அதுபோன்ற எண்ணம் எனக்கு எதிர்காலத்தி லும் நிச்சயம் ஏற்படாது என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.கவின் ஆட்சில் கொண்டுவரப்பட்ட நலத்திட் டங்களை தி.மு.க. அரசு நிறுத்திவருவதாக எதிர்க்கட் சியினரான அ.தி.மு.கவினர் முன்வைத்த குற்றச்சாட் டுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே மு.க.ஸ்டாலின் இவ்வாறு தெரிவித்துள்ளார். தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பல திட்டங்களை அ.தி.மு.க. ஆட்சியில் முடக்கி னர். குறிப்பாக பல இடங்க ளில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியின் பெயர் மறைக்கப்பட்டுள்ளது. செம்மொ ழிப் பூங்காவில் கலைஞரின் பெயரை மறைக்கும் வகை யில் செடி, கொடிகளை நட்டு வைத்தனர். இராணி மேரி கல்லூரியிலும் கலைஞர் பெயர் மறைக்கப்பட்டது.

கலைஞர் ஆட்சியில் புதியதாக கட்டடப்பட்ட சட்டசபை கட்டடத்தை மருத்துவமனையாக மாற் றினார்கள். கலைஞர் கொண்டுவந்த சமத்துவபுரம், உழவர் சந்தை, நமக்கு நாமே திட்டங்களும் முடக்கப்பட்டன.

இப்படி தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் முடக்கப்பட்டமை பற்றி பட்டியல் இட்டுக்கொண்டே செல்லலாம். ஆனால் தி.மு.க. ஆட்சியில் நாங்கள் அது போன்று செயற்படவில்லை. அந்த எண்ணமும் எனக்கு இல்லை. அதனால் தான் ஜெயலலிதா நினை விடத்தைப் பொதுப்பணித் துறையினர் பராமரித்து வருகிறார்கள். அம்மா உணவகங்கள் தொடர்ந்து செயறபட்டு வருகின்றன.

நேற்று இந்த சபையில் பேசிய அவை முன் னவர் அம்மா உணவகத்தை மூடினால் என்ன தவறு? என்று கேள்வி எழுப்பினார். ஆனால், அதுபோன்ற எண்ணம் எனக்கு எப்போதும் ஏற்பட்டது இல்லை. எதிர்காலத்திலும் நிச்சயம் ஏற்படாது. அம்மா உணவகங்கள் எந்தக் கார ணத்தைக் கொண்டும் மூடப்படா என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன், - என்று அவர் குறிப்பிட்டுள் ளார்.





# திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஆரம்பம்

திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் 24 குதங்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 2.4 கோடி அமெரிக்க டொலர்கள் முதலீட்டிலும், 61 குதங்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. புதிய நிறுவனம் ஊடாக 6 கோடி அமெரிக்க டொலர்கள் முதலீட்டிலும் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்து காணப்படும் 99 எண்ணெய்க் குதங்களையும் 827 ஏக்கர் காணியையும் மூன்றாகப் பிரித்து 50 வருடங்களுக்கு மூன்று நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தற்போது திட்டமிட்டுள்ளது.

கடந்த வாரம் அமைச்சரவை அனுமதி வழங்கிய பிரேரணைக்கு ஏற்ப, 14 எண்ணெய்க் குதங்கள் இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கும் 24 குதங்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் எஞ்சிய 61 குதங்கள் இந்திய எண்ணெய் நிறுவனம் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன கூட்டிணைந்த நிறுவனத்திற்கும் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

61 எண்ணெய்க் குதங்கள் மற்றும் அதன் காணியை 50 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்க புதிய நிறுவனம் ஒன்று தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. நீதிமன்றத்திற்கு முன்னால்

# ரூ.இரண்டு லட்சம் கப்பம் கோரிய இருவர் கைது; ஒருவர் தப்பி ஓட்டம்

மட்டு. காத்தான்குடியில் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருக்கும் ஒருவரை நீதிமன்றில் இருந்து வெளியில் எடுத்து தருவதாககூறி குறித்த நபரின் தயாரிடம் 2 இலட்சம் ரூபா கப்பமாக கோரிய தயாரின் சகோதரன் உட்பட இருவரை நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு முன்னால் வைத்து வான் ஒன்றுடன் கைது செய்தமையுடன் பிரதான சூத்திரதாரி தப்பி ஓடியுள்ளார் என மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த ஆண் ஒருவர் கடந்த முதலாம் திகதி ஐஸ் போதைப் பொருளுடன் காத்தான்குடி பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவரை நீதிமன்றில் இருந்து வெளியில் எடுத்து தர 2 லட்சம் ரூபாவை கல்கமுக பிரதேசத்தைச் சேர்ந்த முகமட் காசிம் முகமட் றிபான் என்பவர் கோரியுள்ளார் என காத்தான்குடி முதலாம் பிரிவு மோதினார் லேன் சாவியா வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மட்டு . தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பஜ.கே.ஹாட்டியாராச்சியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி முகமட் ஜெஸலி தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான நேற்று பகல் மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு முன்னால் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது வான் ஒன்றில் வந்திருந்தவர்களை பொலிஸார் சுற்றி வளைத்தபோது அங்கிருந்து கப்பம் கோரிய பிரதான நபர் தப்பி ஓடியுள்ள நிலையில், வானில் வந்திருந்த முறைப்பாடு செய்தவரின் சகோதரன் மற்றும் வான்சாரதியையும் கைது செய்தமையுடன் வான் மற்றும் 4 கையடக்க தொலைபேசிகள் ஆவணங்களையும் மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# ஓட்டமாவடி பிரதேசத்தில் கலை, இலக்கியவிழா நேற்று

கலாசார அலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து ஓட்டமாவடி பிரதேச செயலகம் நடாத்தும் பிரதேச கலை இலக்கிய விழா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதேச செயலக கலாச்சார பேரவையின் மருதோன்றி சஞ்சிகையின் முதல் பிரதி பிரதேச செயலாளர் வீ.தவராஜாவினால் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எஸ்.நவநீதனுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், விருந்தினர்களுக்கும் சஞ்சிகை பிரதி வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது பாடசாலை மாண வர்கள் மற்றும் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றதுடன், பிரதேச செயலக கலாச்சார பேரவையினால் பாடசாலை மட்டத்திலும் திறந்த போட்டியாகவும் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமையுடன் பிரதேச கலைஞர்களதும் பாடச ாலை மாணவர்களதும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.





# திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்!

திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் இன்று (வெள்ளிக்கிழமை) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை ஒன்றை அமைப்பதற்காக அப்பகுதியில் அமைந்துள்ள கடைகளை அகற்றித்தருமாறு உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் பௌத்த துறவி ஒருவரால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டமையை அடுத்து அந்தப் பகுதிக்கு வருகைதந்திருந்த பொலிஸார் அந்தக் கடைகளை அகற்றுமாறு அறிவுறுத்தியிருந்த நிலையில் ஒன்று திரண்ட அப்பகுதி வாசிகளால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்களோடு இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர். நாடு இக்கட்டான சூழ்நிலையில் காணப்படும் இந்தக் காலகட்டத்தில் அரசு இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதுடன் தமிழ்மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பரவலான பெரும்பான்மையினக் குடியேற்றங்களை நிறுவுவதற் காக அரசால் முன்னெடுக்கபடும் இவ்வாறான செயற்பாடுகளைத் தாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் கருத்து தெரிவித்தார்.



# கல்வியங்காடு பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் கல்வியங்காடு ரைனோஸ் அணி சம்பியனானது!


கல்வியங்காடு பிறிமியர் லீக்கின் (கே.பி.எல்) இரண்டாவது பருவகாலத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கல்வியங்காடு ரைனோஸ் (கே. ஆர்) அணி தனதாக்கியுள்ளது.

ஞானபாஸ்கரொதய சங்கம் நடத்திய கல் வியங்காடு பிறிமியர் லீக்கின் (கே.பி.எல்) இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் ஜீ.பி.எஸ் விளையாட்டு மைதானத்தில் ஆரம்ப மாகி நடைபெற்றது.

இப்போட்டியில் கல்வியங்காடு ரைனோஸ் (கே.ஆர்) அணியும் கல்வியங்காடு நைட் ரைடஸ் (கே.கே.ஆர்) அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கல் வியங்காடு ரைனோஸ் அணியின் தலைவர் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட கல்வியங்காடு நைட் ரைடஸ் அணி நிர்ணயிக் கப்பட்ட 10 ஓவர்களில் 72 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. 73 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய கல்வியங்காடு ரைனோஸ் அணியினர் 9 ஓவர்களிலேயே வெற்றி இலக்கை அடைந்தனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கல்வியங்காடு ரைனோஸ் அணி வீரர் மதுசனும் தொடர் நாயகனாக அதே அணி வீரர் தாருகாசனும் தெரிவாகியிருந்தனர். இத்தொடரில் வெற்றி பெற்ற கல்வியங்காடு ரைனோஸ் அணிக்கான வெற்றிக் கிண்ணத்தை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் வழங்கி வைத்தார்.

# டென்னிஸ் நட்சத்திரம் ஜோகோவிச் தடுப்பூசி பெறாததால் திருப்பி அனுப்பல்



ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்பதற்காக அந்நாட்டுக்கு சென்ற உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச், கொரோனாத் தடுப்பூசி செலுத்திகொண்டிருக் காமையால் திருப்பி அனுப்பப்படவுள்ளார்.

ஆஸ்திரேலிய ஓபின் டென்னிஸ் தொடருக்கான போட்டிகள் வரும் 17ஆம் திகதி தொடங்க உள்ளன. இதில் பங்கேற்பதற்காக நடப்பு சம்பியனான செர்பியாவைச் சேர்ந்த நோவக் ஜோகோவிச், ஆஸ்திரேலியாவுக்கு சென்றார். கொரோனாத் தடுப்பூசி செலுத்தி யவர்கள் மட்டுமே ஆஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்படும் நிலையில், தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழை அவர் சமர்ப் பிக்கவில்லை எனத் தெரிகிறது.

தடுப்பூசி செலுத்துவதிலிருந்து அவருக்கு ஆஸ்திரேலிய டென்னிஸ் சம்மேளனம் விலக்கு அளித்திருந்த போதிலும், விலக்கு கோரும் விசாவுக்கு ஜோகோவிச் தரப்பு விண்ணப்பிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. தடுப்பூசி செலுத்துவதற்குத் தான் தகுதியான நபர் அல்ல என வைத்தியரிடம் பெற்ற சான்றிதழ்களை சமர்பித்த போதிலும், அவரது விசாவை ஆஸ்திரேலிய அரசு ரத்துச் செய்துள் ளது. இதனால் பல மணி நேரமாக விமான நிலையத்தில் காத்தி ருக்கும் ஜோகோவிச், மீண்டும் செர்பியா திரும்பவுள்ளார்.

9 முறை ஆஸ்திரேலிய ஓபின் சம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிச், கடந்த ஆண்டு தடுப்பூசிக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.







# நடைமுறைச்சாத்தியமாக சிந்தித்து முன்னோக்கி நாம் செல்லவேண்டும்

## ஜோன்ஸ்டன் திட்டவட்டம்

புத்தாண்டில் நடைமுறைச்சாத்தியமாக சிந்தித்து முன்னோக்கிச் செல்லவேண்டும் என ஆளும் தரப்பு பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குருநாகல் மலியதேவ மகளிர் வித்தியாலயத்தின் புதிய மூன்று மாடிக் கட்டடத்தை நேற்று (வியாழக்கிழமை) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்துள்ளது. அதனால், பொருள்களின் விலை உயர்ந்துள்ளது.

எரிவாயு தொடர்பில் சிக்கல் உள்ளது. எரிவாயு வெடித்ததாகக் கூறப்படுகிறது. இந்த காஸ் வெடிப்பு சம்பவங்களின் பின்னணியில் சதி உள்ளனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஏனென்றால் கொழும்பு-07 பகுதியில் எரிவாயு வெடிப்பதில்லை.

வட மாகாணத்தில் எரிவாயு வெடிப்பதில்லை. கண்டி, குருநாகல் பகுதிகளில் எரிவாயு வெடிக்கவில்லை. எனவே, இந்த எரிவாயு வெடிப்புகள் தொடர்பாக முறையான விசாரணை நடத்த வேண்டும். ஜனாதிபதி எரிவாயு வெடிப்பு தொடர்பில் இரகசிய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த எரிவாயு வெடிப்புகள் தொடர்பாக நாட்டு மக்கள் இப்போது ஆர்வமாக உள்ளனர். மக்கள் இப்போது எரிவாயு பயன்படுத்தப் பயப்படுகிறார்கள். அடுத்த சில வாரங்களில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என நம்புகிறேன். கொவிட் தொற்றால் பாடசாலை மாணவர்கள் தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை இழந்தனர். அவர்கள் மன உளைச்சலில் உள்ளனர். எதிர்காலத்தில் இந்த கொவிட் தொற்றுநோயிலிருந்து மீண்டு வருவோம் என்று நம்புகிறேன்.

சமீபத்தில், ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்தை வற்புறுத்தினர். தற்போது ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளோம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு முயன்ற போது பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அவர்களை போராட்டத்துக்குத் தூண்டினர். மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் சிலர் தெருவில் வீதியில் இறங்கினர்.

ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டது. ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறியவர்கள் ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கூட அங்கீகரிக்கவில்லை. – எனத் தெரிவித்தார்.

# மடுமாதா வைத்தியசாலைக்கு நேற்று அடிக்கல் நாட்டி வைப்பு!

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் அமைக்கப்படவுள்ள மடுமாதா வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சகல வசதிகளுடன் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வகையில் அமைக்கப்படவுள்ள குறித்த வைத்தியசாலைக்கான அடிக்கல்லை மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை நாட்டி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. விநோதன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ் உள்ளடங்களாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், ஆயரின் செயலாளர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவுக்கு ஒருதொகைப் பணத்தை இன்று செலுத்துகின்றது இலங்கை!

சீன நிறுவனம் ஒன்றுக்கு 67 லட்சம் அமெரிக்க டொலர் செலுத்த மக்கள் வங்கி தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பற்றீரியாக்கள் அடங்கியதாகக் கூறப்பட்டு, சர்ச்சையை ஏற்படுத்திய உரத்தை இலங்கைக்கு கொண்டு வந்த சீன நிறுவனத்துக்கே இவ்வாறு பணம் செலுத்தப்படவுள்ளது.

இதற்கமைய குறித்த தொகை இன்று (வெள்ளிக்கிழமை) செலுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இலங்கையின் அந்நிய செலாவணி மேலும் குறைவடையும் என தகவல்!

எதிர்வரும் 18ஆம் திகதி இலங்கை செலுத்த வேண்டிய 50 கோடி அமெரிக்க டொலரை செலுத்தியதன் பின்னர், அந்நிய செலாவணி மேலும் குறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நிபுணர் கலாநிதி நிஷாந்த டி மெல் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக இலங்கை தரப்படுத்தலில் மேலும் வீழ்ச்சியடையும் நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடன் செலுத்துவதால் மட்டும் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது எனவும் கடனை செலுத்தும் அளவுக்கு அந்நிய செலாவணி குறைவடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




## மட்டு. முதல்வர் ஆணையருக்கெதிராக தாக்கல் செய்த வழக்கு ஒத்திவைப்பு!

மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி. சரவணபவனினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மேல்நீதிமன்ற நீதிபதி அ.அப்துல்லா நேற்று ஒத்திவைத்துள்ளார்.

மட்டக்களப்பு ஆணையாளருக்கு எதிராக மாநகர சபை முதல்வரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்கு தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்துவெளியிட்டிருந்தார், மேலும் அவர் கூறியமை வருமாறு–

'மாநகர முதல்வர் தி. சரவணபவனால் தாக்கல் செய்யப்பட்ட தடையீட்டு எழுத்தாணை கூறும் விண்ணப்பம் நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது எதிர் மனுதாரர்கள் சார்பில் சில ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன.

அதாவது மனுதாரர்கள் சார்பில் கோரப்பட்ட மாற்று சத்திய கூற்று பிரதிகள் தங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என்றும் குறித்த பிரதிகள் கிடைக்காத படியால் உடனடியாக இந்த வழக்கை இறுதித் தீர்ப்பு கட்டளைக்கு நியமிக்குமாறு விண்ணப்பம் செய்து அதற்கு மேலதிகமாக ஓர் எழுத்து மூல சமர்ப்பணத்தையும் திறந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

விண்ணப்பம் தொடர்பில் எமது எதிர் சமர்ப்பண விண்ணப்பம் செய்திருந்தோம் இதில் மேன்முறையீட்டு நீதிமன்ற ஒழுங்கு விதிமுறைகளை சுட்டிக்காட்டி இருந்தோம்.

அந்த அடிப்படையில் அவதானித்த நீதிபதி– குறித்த விடயம் தொடர்பாக மாற்றுச் சக்தி கூற்று கிடைக்காத காரணத்தால் தமது கட்டளைக்காக எதிர்வரும் 24 ஆம் திகதி திகதி வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

# சுகாதார சேவை தொடர்பாக முறையிட விசேட துரித எண்

சுகாதார சேவைகள் தொடர்பாக, ஏதேனும் முறைப்பாடுகள் அல்லது குறைகள் இருப்பின் 1907 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய முடியும். நாட்டில் நிலவும் சுகாதார சேவை தொடர்பில் பொதுமக்கள் தங்களது கருத்துக்கள், முறைப்பாடுகள், குறைகள் மற்றும் அனைத்து ஆலோசனைகளையும் தெரிவிக்க இந்தத் துரித தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சுவ செவன என்ற பெயரில் இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். அத்துடன், 1907 என்ற துரித இலக்கத்தின் ஊடாக இவ்வாறான முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகளை முன் வைக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 0707 907 907 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு வட்ஸ்அப் மற்றும் வைபர் ஊடாகவும் இந்த முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகளை முன்வைக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2022இல் வெளியிடப்பெற்றது.